1981 பிப்ரவரி 5]

உள்நாட்டுக்கு கடத்தப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் இருந்து லிங்கன் சிலை தமிழ் நாட்டிற்கு வந்து இருப்பதாக அறிகிறேன். அதைப் பற்றி இந்த அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி கோவில் களில் உள்ள சிலைகளைப் பற்றியதாகும். லிங்கன் சிலை கோவி லில் வைப்பது இல்லை.

* வினா எண். 186— திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுக்கா, பூம்பாறையில் அருள்மிகு குழந்தைவேலப்பர் கோவிலில் இருந்த சிலைகள் 1977-ல் திருடு போய் விட்டனவா ?

(ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

(இ) அந்தச் சிலைகளை மீண்டும் கோயிலில் வைக்க ஏற் பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) (ஆ) மற்றும் (இ) : கொடைக்கானல் தாலுக்கா பூம்பாறையிலுள்ள அருள்மிகு குழந்தைவேலப்பர் கோவிலில் பார்வதி, பரமசிவன், வள்ளி யம்மன், தெய்வானை, அப்பர், சுந்தரர் ஆகிய ஆறு ஐம்பொன் சிலைகள் 9—8—1977 அன்று இரவு திருடு போய்விட்டன. மேற்படி களவு குறித்து கொடைக்கானல் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டு, 11—2—1978 அன்று ஆறு பேர்களை காவல் துறையினர் கைது செய்து மேற்படி சிலைகளையும் கைப் பற்றியுள்ளனர். குற்றவாளிகள்மீது மதுரை மாவட்ட மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. வழக்கு முடிந்த பிறகு சிலைகளை மீண்டும் கோவிலில் வைக்க ஏற்பாடு செய்யப் படும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பழமையானதும், சேர மன்னனால் கட்டப்பட்டதுமான அந்த மிகப்பழமையான கோவிலில் இருந்து களவாடப்பட்டுச் சென்ற சிலையின் மதிப்பு என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, களவுபோன சிலையைப் பற்றிய மதிப்பை தொல் பொருள் ஆய்வுத் துறை தோராயமாக சுமார் 4 இலட்சம் ரூபாய் இருக்கும் என்று மதிப்பிட்டு இருக்கிறது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : தலைவர் அவர் களே, கடல் கடந்து சென்ற நடராஜர் சிலையை மீண்டும் தமிழ் நாட்டிற்குக் கொண்டுவர அரசு என்ன நடவடிக்கை எடுத் துள்ளது ?

[1981 பிப்ரவரி 5

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் முன்பே பதில் அளித்து இருக்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் பல்வேறு கோவில்களில் இப்படிப்பட்ட திருட்டுகள் நடைபெறுகின்றன. அதற்குக் காரணம் கோவில்களில் இருக்கும் கதவுகள் சரியாக இல்லை. அதனால் அவைகளுக்கு சரியான பாதுகாப்பு இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கோவில்களுக்கு சரியான பாதுகாப்பு அளிக்கும் வகையில் பலமான கதவுகளை புதிதாக அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு எழுப்பப்பட்ட மூலக்கேள்விக்கு தெளிவான முறையில் பதில்களை அச்சிட்டு உறுப்பினர்களுக்குத் தந்து இருக்கிறேன். அதை அவர்கள் படித்துப் பார்த்தால் எடுத்து இருக்கும் நடவடிக்கை தெரியும். அவர் கேட்ட கேள்விக்கும் பதில் அதிலே இருக்கிறது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சிலை திருடியவர்களையும் கைது செய்து, சிலையையும் கைது செய்து இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிலையை எந்த செக்ஷனில் கைது செய்து இருக்கிறீர்கள்? எந்த லாக்கப்பில் அதை சிறை வைத்து இருக்கிறீர்கள்?

THIRU N. S. V. CHITHAN : May I know how you are allowing this question ?

MR. SPEAKER : For the sake of humour.

திரு. ரா. உமாநாத் : அப்படிக் கேட்பதில் என்ன தவறு ? ஹவுஸ் 'போர்' அடித்துப் போக வேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கேள்வியை சீரியஸ்ஸாகக் கேட்கவில்லை. கேள்வி சீரியஸ்ஸாக இல்லாததால் விடையும் சீரியஸ்ஸாக இருக்காது. இதற்கு பதில் அளிக்க வேண்டியது இல்லை.

திரு. ரா. உமாநாத் : பெரியார் படம் இந்த மன்றத்தில் இருக்கிறது. என்னுடைய கேள்வி பெரியார் கொள்கையை ஒட்டித்தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரியார் எந்த செக்ஷனில் சிலைகளைக் கைது செய்தீர்கள் என்று கேட்டது இல்லை. நான் பெரியாரின் செயலாளராக இருந்தவன்.

1981 பிப்ரவரி 5]

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, களவுபோன சிலை பம்பாயிலிருந்து மீட்கப்பட்டதாகத் தெரிகிறது. பம்பாயில் அந்தச் சிலை யாரிடத்தில் இருந்தது? அந்த பம்பாய் நபர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, எங்கே இருந்து மீட்கப்பட்டது என்கிற தகவல் இல்லை. அது சம்பந்தமாக 6 பேர்கள் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று இருக்கிறது. அதிலே இரண்டு பேர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 4 பேர்கள் மீது வழக்கு நடைபெற்று வருகிறது. அதிலே ஒருவர் தலைமறைவாக இருக்கிறார். இந்தத் தகவல்தான் இருக்கிறது. எந்த இடத்தில் இருந்து எந்த மாநிலத்தில் இருந்து மீட்கப்பட்டது என்ற தகவல் இல்லை.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அந்தக் களவு போன சிலை பின்னப்பட்டு அல்லது சேதப்பட்டு மீட்கப்பட்டதாக அறிகிறேன். அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டுள்ள தகவலில் இருந்து அப்படி பின்னப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை.

பூம்புகார் சுற்றுலா விடுதி

* வினா எண்.—187 திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் பூம்புகாரில் கட்டப்பெற்றுள்ள தங்கும் விடுதிகள் பொதுமக்கள் பயனுக்கு இன்னும் திறந்து விடாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் இருந்து அந்த நிலை இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) : பூம்புகாரில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி (Dormitory) சங்கு, சிப்பி வடிவ குடில்கள் முறையே 20—11—1976, 28—2—1980 முதல் திறந்து விடப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவை சுற்றுலாத் துறையின் பொறுப்பில் உள்ளன.